2000 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களைப் பொறுத்த அளவில் ஓமியோபதி மருத்துவம் செலவு குறைவாக இருக்கிற மருத்துவ வசதி என்ற எண்ணம் இருக்கிறது. அது மட்டுமல்ல, சில நோய்களைப் பொறுத்த அளவிலே ஓமியோபதியிலே நல்ல மருந்து கிடைக்கிறது என்ற ஒரு எண்ணமும் உண்டு. மேலும், இந்த E.S.I. திட்டத்திற்குச் செலவாகிற ஓமியோபதி வசதிக்கு மத்திய அரசு நிதி உதவி கொடுக்கிறது என்ற காரணத்தினால், தொழிலாளர்களுடைய இந்த எண்ணத்தை நிறைவேற்றக்கூடிய முறையிலே E.S.I. மருத்துவமனைகளில் ஓமியோபதி பிரிவையும் ஏற்படுத்துவதற்கு அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தும் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *156*, திரு. எம். ரங்கநாதன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

156—

நீதிமன்ற வளாகம்

***22332—திரு. எம். ரங்கநாதன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் நகரில் நீதிமன்ற வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குன்னூர் நகரில் நீதிமன்ற வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2000 மார்ச் 30

திரு. எம். ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூர் மாநகரிலே பழைமை வாய்ந்த ஒரு கட்டடத்திலே நீதிமன்றம் நடந்து கொண்டிருக்கிறது. மழை, வெயில் காலங்களிலும், அதேபோல காற்றுக் காலங்களிலும் அங்கு மக்களுக்கு மிகவும் பெரிய பாதிப்பாக இருக்கிறது. ஆக, 100 ஆண்டுகளுக்கு மேலாகவே அந்த வளாகத்தில் நடந்து கொண்டிருக்கும் நீதிமன்றக் கட்டடத்தைப் புதுப்பித்து, அதே இடத்திலே கட்ட அரசு முன்வருமா? ஏறக்குறைய 2 ஆண்டுகளுக்கு முன்பு, உயர் நீதிமன்ற நீதிபதிகள் கூட அந்த இடத்தை வந்து பார்த்தார்கள். பார்க்கின்ற நேரத்திலே நாங்கள் அத்தனை பேரும் அந்த ஊரிலே இருக்கின்ற எல்லோரும் சேர்ந்து அதே இடத்திலே கட்ட வேண்டும் என்று கூட வற்புறுத்திச் சொன்னோம். ஆக அந்த ஊரின் நிலைமையைக் கருதி மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், வழக்குகளுக்கு வருகின்ற வழக்கறிஞர்கள் அத்தனை பேருக்கும் பாதுகாப்பு அளிக்கும் வகையிலும் அந்த நீதிமன்றத்தைப் புதுப்பித்துத் தர அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தின் பதிவாளரிடத்திலேயிருந்து 24-11-1998-ல் ரூ.1.16 கோடி மதிப்பில் வளாகம் அமைப்பதற்கான பரிந்துரை வந்திருக்கிறது. அரசு அதனுடைய தேவையை உணர்ந்திருக்கிறது. ஆனால் நிதி நெருக்கடியின் காரணமாகத் தற்போது அதைச் செயல்படுத்த முடியவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 157, திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

157—

சத்துணவுக் கூடம்

***14803—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—